# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

மனு எண். **742 மற்றும் 744/ந/2019**

நாள் : **25/09/2019**

| | | |
|---|---|---|
| **உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம்,<br>செங்கல்பட்டு மண்டலம்.** | – | **முறையீட்டு மனுதாரர்** |
| **திருவாளர்கள்<br>G. கணேசமூர்த்தி,<br>G.K. பாலசுப்ரமணியன்,<br>நகரமைப்பு ஆய்வாளர்கள்,<br>பல்லாவரம் நகராட்சி, பல்லாவரம்.** | – | **எதிர் மனுதாரர்கள்** |

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர்களாகப் பணிபுரியும் திருவாளர்கள் G. கணேசமூர்த்தி மற்றும் G.K. பாலசுப்ரமணியன் ஆகியோர் குறித்து செங்கல்பட்டு மண்டல உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினர் தெரிவித்த குற்ற முறையீடுகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர்களாகப் பணிபுரியும் திருவாளர்கள் G. கணேசமூர்த்தி மற்றும் G.K. பாலசுப்ரமணியன் ஆகியோர் குறித்து செங்கல்பட்டு மண்டல உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம் என்ற பெயரில் நாள் மற்றும் கையொப்பமிடாத குற்ற முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட குற்ற முறையீட்டு மனுக்களில் கீழ்க்காணும் தகவல்களைத் தெரிவித்து துறை ரீதியான விசாரணை மேற்கொண்டு மேற்குறிப்பிட்ட அலுவலர்களை பணியிடை நீக்கம் செய்ய வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது :-

1. நகராட்சி விதிகளுக்கு முரணாக கட்டட அனுமதி வழங்கியது ;
2. எதிர் மனுதாரர்கள் பணியாற்றிய நகராட்சிப் பகுதிகளில் சொத்துக்களை வாங்கியது ;
3. இடைத் தரகர்கள் மூலம் கையூட்டு பெறுவது ;
4. தொல்லியல் துறையினரால் தடை செய்யப்பட்ட பகுதி மற்றும் அரசு நிலங்களில் கட்டட அனுமதி வழங்கியது ;
5. ரூபாய் 500/– கோடிகளுக்கு மேல் சொத்து சேர்த்துள்ள எதிர்மனுதாரர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொண்டு பணியிடை நீக்கம் செய்யக் கோருவது.

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள எதிர்மனுதாரர்கள் மீதான குற்ற முறையீடுகள் குறித்து பல்லாவரம் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். புகார் மனுவினை அளித்துள்ளதாகக் கூறப்படும் வரைபட வரைவாளர் சங்கம் என்ற அமைப்பு இல்லையென விசாரணையில் அறியப்பட்டதென்றும் மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் மீதான புகார் மனுவில் யாரும் கையொப்பமிடவில்லை என்றும் அவர்கள் மீது புகார் செய்ய வேண்டுமென்ற நோக்கில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், எதிர்மனுதாரர்களிடம் விசாரணை மேற்கொண்டு அவர்களது வாக்குமூல நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

3. எதிர்மனுதாரர்களான நகரமைப்பு ஆய்வாளர்கள் திருவாளர்கள் G. கணேசமூர்த்தி மற்றும் G.K. பாலசுப்ரமணியன் ஆகியோரிடம் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. குற்றமுறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டது போன்று தன் பெயரிலோ அல்லது தன் குடும்பத்தார் பெயரிலோ அடுக்குமாடி குடியிருப்பு எதுவும் இல்லை என்று விசாரணையின் போது திரு G. கணேசமூர்த்தி தெரிவித்தார். மேலும், அரசு அனுமதி பெற்று குளத்தூர் பகுதியில் 1596 சதுரடி மனையில் கட்டப்பட்ட வீடு மட்டுமே உள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், தொல்லியல் துறையினரால் தடைசெய்யப்பட்ட பகுதியிலும் அரசு நிலங்களில் கட்டட அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். பத்திரிக்கையாளர் ஒருவர் மீது தான் உட்பட 20 நபர்கள் வழக்கு தொடுத்து அவர் சிறை செல்ல நேரிட்டது. அந்த பத்திரிக்கையாளரே இதுபோன்ற புகார் மனுக்களை அனுப்புவதாகவும் திரு G. கணேசமூர்த்தி தெரிவித்தார். மற்றொரு எதிர்மனுதாரரான திரு G.K. பாலசுப்ரமணியன் என்பவரும் தனக்கு மனுவில் குறிப்பிட்டது போல் ஹோசூர் நகரில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் எதுவும் இல்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். தனக்கு எந்த முகவரும் இல்லை என்றும் மனை கட்டுநர் எவரையும் தான் சந்தித்ததில்லை என்றும் தெரிவித்தார் .

4. பல்லவபுரம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர்கள் திருவாளர்கள் G கணேசமூர்த்தி மற்றும் G.K. பாலசுப்ரமணியன் ஆகியோர் மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதார ஆவணங்கள் எதுவும் முறையீட்டு மனுதாரரான உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினரிடமிருந்து பெறப்படவில்லை. மேலும், குற்ற முறையீட்டு மனுவும் கையொப்பமிடாமலும், அனுப்புநர் முகவரியும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரிடமும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலவில்லை. குற்ற முறையீடுகள் குறித்து மேற்குறிப்பிட்ட எதிர்மனுதாரர்களான நகரமைப்பு ஆய்வாளர்கள் மறுத்துள்ள நிலையிலும் அவர்கள் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்ற முறையீடுகளுக்கு போதுமான ஆதார ஆவணங்கள் இல்லாத நிலையிலும் இந்நேர்வின் மீதான நடவடிக்கையினை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, [illegible] திங்கள், 25–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. **திரு G. கணேசமூர்த்தி,**
**நகரமைப்பு ஆய்வாளர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**பல்லவபுரம்.**

2. **திரு G.K. பாலசுப்ரமணியன்,**
**நகரமைப்பு ஆய்வாளர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**பல்லவபுரம்.**

3. **நகராட்சி ஆணையர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**பல்லவபுரம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
**இ.கோ. / உதிரி**